**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 9ம் நாள்
2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 28/2013**

**CNR.No.TNMY07-000026-2013**

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி மனைவி, வீட்டுக்குடித்தனம் 70 வயதுள்ள நீலாவதி (இறந்தார்) தனக்காகவும் தனது குடும்ப உறுப்பினர்களுக்காகவும் குடும்ப நிர்வாகி மற்றும் தலைவர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளார்.

2. திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா நன்னிலம் முன்சீப், மஞ்சக்குடி அஞ்சல் மற்றும் கிராமத்தில் மேலத்தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரத்தியும், வீரமணி மனைவியுமான 55 வயதுள்ள சுதா.

3. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 54 வயதுள்ள ஐயப்பன்

4. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 52 வயதுள்ள வெங்கடேசன்

5. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 50 வயதுள்ள மோகனகண்ணன்

6. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப். 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 44 வயதுள்ள சட்டையப்பன்

7. திருவாரூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா, திருவாரூர் முன்சீப், விளம்பல் அஞ்சல் மற்றும் கிராமத்தில் கூட்டுறவு நகரில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரத்தியும், விஜயபாஸ்கர் மனைவியுமான 39 வயதுள்ள மீனாட்சி

8. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப். 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி

குமாரர் 42 வயதுள்ள ரகுராமன்

9. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 38 வயதுள்ள பாரதி ராஜா (இறந்தார்)

10. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், செம்பிறுப்பு அஞ்சல், தென்பாதி தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரத்தியும், ஆறுமுகம் மனைவியுமான 30 வயதுள்ள பபிதா

11. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) கிருஷ்ணமூர்த்தி குமாரர் 29 வயதுள்ள பிரவின் குமார்.

12. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) பாரதி ராஜா மனைவி 32 வயதுள்ள ராதா.

13. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) பாரதி ராஜா குமாரத்தி 5 வயதுள்ள மைனர் சிவசங்கரி சார்பாக அவரது தாயாரும், பாதுகாவலரும், கார்டியனுமான சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) பாரதி ராஜா மனைவி 32 வயதுள்ள ராதா மூலம்.

14. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) பாரதி ராஜா குமாரத்தி 3 வயதுள்ள மைனர் கீர்த்திவாசன் சார்பாக அவரது தாயாரும், பாதுகாவலரும், கார்டியனுமான சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் (லேட்) பாரதி ராஜா மனைவி 32 வயதுள்ள ராதா மூலம்

**...வாதிகள்**

**...எதிர்...**

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப் 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மற்றும் அஞ்சல் மேலத் தெருவில் வசிக்கும் சிவப்பிரகாசம் குமாரர் 45 வயதுடைய கண்ணப்பன் (இறந்தார்).

2. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், சீர்காழி டவுன் தென்பாதியில் அலுவலகம் வைத்துள்ள வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம், தென்பாதி, சீர்காழி. அவருடைய அலுவலகம் சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீப், சீர்காழி டவுன் தென்பாதியில் அமைந்துள்ளது.

3. மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் முன்சீப், மயிலாடுதுறை டவுனில் அலுவலகம் வைத்துள்ள கோட்டாச்சியர் அவர்கள், கோட்டாச்சியர் அலுவலகம் மயிலாடுதுறை. அவருடைய அலுவலகம் மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் முன்சீப், மயிலாடுதுறை டவுனில் அமைந்துள்ளது.

4. நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தாலுக்கா, நாகப்பட்டினம் டவுனில் அலுவலகம் வைத்துள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம். அவருடைய அலுவலகம் நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தாலுக்கா நாகப்பட்டினம் டவுனில் அமைந்துள்ளது.

5. சீர்காழி தாலுக்கா, நெய்வாசல் கிராமம் மேலத்தெருவில் வசிக்கும் (லேட்) கண்ணப்பன் குமாரர் 38 வயதுள்ள செல்வமணி.

6. சீர்காழி தாலுக்கா நெய்வாசல் கிராமம் மேலத்தெரு வசிக்கும் (லேட்) கண்ணப்பன் குமாரத்தியுமான செந்தில்குமார் மனைவி 36 வயதுள்ள ரேகா

7. சீர்காழி தாலுக்கா நெய்வாசல் கிராமம் மேலத்தெருவில் வசிக்கும் (லேட்) கண்ணப்பன் குமாரத்தி 30 வயதுள்ள ரேவதி.

8. சீர்காழி தாலுக்கா நெய்வாசல் கிராமம் மேலத்தெருவில் வசிக்கும் (லேட்) கண்ணப்பன் குமாரர் 28 வயதுள்ள சந்திரபோஸ்.

**...பிரதிவாதிகள்**

தாவா வழக்கு A அட்டவணை சொத்து வாதிகளுக்கு 5 முதல் 8 பிரதிவாதிகளிடமிருந்து அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டுமானங்கள் அகற்றப்பட்டு காலி மனையாக தாவா வழக்கு 'பி' அட்டவணை சொத்தை வாதிகளுக்கு 5 முதல் 8 பிரதிவாதிகளிடமிருந்து வசம் கிடைக்க கோரியும், தாவா வழக்கு B அட்டவணை சொத்தில் உள்ள கட்டுமானங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை 5 முதல் 8 பிரதிவாதிகள் அகற்றி வாதிகள் வசம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா A–அட்டவணை சொத்தின் ஒரு பகுதியான B அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகள் மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகளிடமிருந்து ஆவணங்களுக்கு விரோதமாக 2 முதல் 4 பிரதிவாதிகள் சர்வே நம்பரில் உட்பிரிவுகள் செய்து B அட்டவணை சொத்தை பொறுத்து முதல் பிரதிவாதியின் தந்தையான லேட்.சிவபிரகாசம் பெயரில் பட்டா கொடுத்தது செல்லாது அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், செலவு தொகை கோரியும், இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 02.02.2013 |

| | |
|---|---|
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 02.02.2013 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 03.12.2012–ம் தேதியில் சீர்காழி தாலுக்கா, 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | தாவா வழக்கு B அட்டவணை சொத்து காலிமனையாக அதில் உள்ள கட்டுமானங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு காலி மனையாக வாதிகளுக்கு முதல் பிரதிவாதி மற்றும் 5–8 பிரதிவாதிகளிடமிருந்து தாவா வழக்கு B அட்டவணை சொத்து வசம் பெற வாதிகளின் பொருமானம் சென்ட் 1க்கு ரூ.5,000/– வீதம் 2½ x 500க்கு ரூ.12,500/– என மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.938/– நீ.ம.க.ச பிரிவு 30 ன் படியும், மற்றும் தாவா வழக்கு B அட்டவணை சொத்தில் உள்ள கட்டுமானங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை முதல் பிரதிவாதி மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகள் வாதிகள் வசம் ஒப்படைக்க வாதிகளுக்கு முதல்பிரதிவாதி மற்றும் 5முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற பொருமானம் ரூ.1000/– என மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.75.50/– நீ.ம.க.ச பிரிவு 27(சி)ன் படியும், மற்றும் தாவா A அட்டவணை சொத்தின் ஒரு பகுதியான B அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகள் மற்றும் முதல் பிரதிவாதி மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகள் ஆவணங்களுக்கு விரோதமாக 2–4 பிரதிவாதிகள் சர்வே நம்பரில் உட்பிரிவுகள் செய்து B அட்டவணை சொத்தை பொறுத்து முதல் பிரதிவாதியின் தந்தையான லேட்.சிவபிரகாசம் |

| | |
|---|---|
| | பெயரில் பட்டா கொடுத்தது செல்லாது அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற விளம்பல் பரிகாரம் பெற பொருமானம் ரூ.5000/- என மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.150/- நீ.ம.க.ச பிரிவு 25(d) ன் படியும், ஆக மொத்தம் ரூ.18,500/- என நிர்ணயிக்கப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.1163/- நீ.ம.க.ச பிரிவு 30 மற்றும் 27(சி), 25(d) ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

**<u>A அட்டவணை சொத்து</u>**

மயிலாடுதுறை ரிஜிஸ்ட்ரேஷன், பூம்புகார் சப்-ரிஜிஸ்டர், (தற்போது செம்மனார் கோவில் சப்-ரிஜிஸ்டர்) சீர்காழி தாலுக்கா, 81 கீழையூர் வட்டம் நெய்தவாசல் கிராமம், மேலத்தெருவில்,

R.S. N.o. 54/2 புதிய சர்வே No. 54/2E ஏக்கர் 0.10 சென்ட்

**<u>நான்கெல்லைகள்</u>**

நெய்த வாசல் ரோட்டிற்கு கிழக்கு, வாதி புஞ்சைக்கு மேற்கு, பிரதிவாதி கண்ணப்பன் புஞ்சை மனைக்கு தெற்கு, பரமசிவம் புஞ்சைக்கு வடக்கு அதில் உள்ள ஓட்டு வீடு உட்பட

**<u>B அட்டவணை சொத்து</u>**

மயிலாடுதுறை ரிஜிஸ்ட்ரேஷன், பூம்புகார் சப்–ரிஜிஸ்டர், (தற்போது செம்மனார் கோவில் சப்–ரிஜிஸ்டர்) சீர்காழி தாலுக்கா, 81 கீழையூர் வட்டம் நெய்தவாசல் கிராமம், மேலத்தெருவில்,

R.S. N.o. 54/2 புதிய சர்வே No.54/2E ஏக்கர் 0.02 ½ செண்ட்

**<u>நான்கெல்லைகள்</u>**

நெய்தவாசல் ரோட்டிற்கு கிழக்கு, பிரதிவாதி புஞ்சைக்கும், வாதியின் புஞ்சைக்கும் மேற்கு, கண்ணப்பன் புஞ்சை மனைக்கு தெற்கு, வாதியின் இதர புஞ்சைக்கு C அட்டவணை சொத்திற்கு வடக்கு.

**<u>C அட்டவணை சொத்து</u>**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், பூம்புகார் சார் பதிவகம், (தற்போது செம்பனார் கோயில் சார் பதிவகம்) சீர்காழி தாலுக்கா 81 கீழையூர் வட்டம், நெய்தவாசல் கிராமம் மேலத்தெருவில்,

R.S.No.54/2 புதிய சர்வே எண்.54/2E ஏக்கர் 0.07½ செண்ட்

**<u>நான்கெல்லைகள்</u>**

நெய்தவாசல் ரோட்டிற்கு கிழக்கு, வாதியின் இதர புஞ்சைக்கு மேற்கு, B அட்டவணை சொத்திற்கு தெற்கு, பரமசிவம் புஞ்சைக்கு வடக்கு இதற்குட்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த செலவுத்தொகை பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| 1. பிராது ஸ்டாம்பு | ரூ. | 1163.00 |
| 2. வக்காலத்து | ரூ. | 10.00 |
| 3. சம்மன் படி | ரூ. | 50.00 |
| 4. நோட்டீஸ் படி | ரூ. | 50.00 |

| | | |
|---|---|---|
| 5. தஸ்தாவேஜிகளுக்கு ஸ்டாம்பு | ரூ. | 100.00 |
| 6. மனுக்களின் ஸ்டாம்பு | ரூ. | 100.00 |
| 7. இன்ஜங்ஷன் மனு ஸ்டாம்பு | ரூ. | 20.00 |
| 8. நோட்டீஸ் செலவு | ரூ. | 500.00 |
| 9. டைப் சார்ஜ் | ரூ. | 200.00 |
| 10. வக்கீல் பீஸ் (சீனியர்) | ரூ. | 500.00 |
| 11. வக்கீல் பீஸ் (ஜூனியர்) | ரூ. | 200.00 |
| ஆக மொத்தம் | ரூ. | **2,893.00/-** |

**பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.28/2013

நாள்.23.03.2026.